9th July 1962]

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: தமிழகத்தில் நடக்கும் எல்லாத் திருமணங்களையும் 'ரிஜிஸ்டர்' செய்து கொள்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை. கட்டாய முறை இல்லாமல் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் ரிஜிஸ்டர் செய்துக்கொள்வது நல்லது. ரிஜிஸ்டர் செய்துகொள்வதை நாங்கள் வரவேற்கிறோம்.

திரு. இராம அரங்கண்ணல்: அவ்வாறு ரிஜிஸ்டர் செய்து கொள்ள விரும்பினாலும், வெகு தூரத்திற்கு சென்று பதிவு செய்து கொள்ளவேண்டியிருக்கிறது என்பதை சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்ட நான் என்னுடைய வாழ்க்கையிலே உணர்ந்திருக்கிறேன். ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் இருக்கிற சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களிலேயே இந்தத் திருமணங்களைச் செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சப்-ரிஜிஸ்டிரார் அருகில்தான் இருப்பார். திருமணம் செய்துகொண்டதும் அங்கே போவதே ஒரு "ஹனி மூன்" டிரிப்பாக இருக்கும். (சிரிப்பு.)

Sugar factories

* 206 *Q.*—SRI V. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are negotiating with any private concerns for the establishment of any sugar factories in the State; and

(*b*) if so, their capacity and the places where they are to be located?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கவர்னர் அவர்கள் உரையிலே தனிப்பட்டவர்கள் மூன்று சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களோடு அரசாங்கம் கலந்து ஆலோசித்து வருகிறது என்றும் அந்த உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நான் கேள்வி கேட்டபொழுது, அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். இதில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். கேள்வி என்னவென்றால் "Whether the Government are negotiating with any private concerns for the establishment of any Sugar factories". இதில் அரசாங்கம் ஒன்றும் நெகோஷியேட் பண்ண வேண்டிய அவசியமில்லை. தனியார் மூன்று பேர், மூன்று கம்பெனிகள் வைக்கப் போகிறார்கள். அவர்களுக்கு லைசென்சு வழங்கியிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்பொழுது இருக்கிற சர்க்கரை ஆலைகளில் கரும்பு உற்பத்தியைக் குறைக்கவேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்களா? அப்படி கரும்பு உற்பத்தியைக் குறைக்காமல், மேலும் பல சர்க்கரை ஆலைகளை அனுமதிப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கரும்பு உற்பத்தியைக் குறைக்க சர்க்காருக்கு உத்தேசம் இல்லை. மேற்கொண்டு சர்க்கரை ஆலைகளை வைப்பதற்கு தொழிலதிபர்கள் முன்வரவில்லை.

திரு. க. ர. நல்லசிவம் : சமீபத்தில் மத்திய சர்க்கார் புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு உத்தரவிட்டிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்தேன். அப்படி இருக்கும்பொழுது தனியாருக்கு எப்படி லைசென்சு கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் உத்தரவு ஒன்றும் போடவில்லை. கொஞ்ச காலமாகவே சர்க்கரை 'ஸர்ப்பிளஸ்'-ஆக இருக்கிறது. அதை விற்பது கஷ்டமாக இருக்கிறது என்ற காரணத்தினாலே புதிதாக லைசென்சு வழங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவு எடுப்பதற்கு முன்பே இந்த மூன்று லைசென்சுகளும் வழங்கப்பட்டுவிட்டன.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் அமைச்சர் அவர்கள், கரும்பு உற்பத்தியைக் குறைக்கவில்லையென்று சொன்னார்கள். நெல்லிக்குப்பம் ஆலையைப் பொறுத்தவரையில், அதற்கு சப்ளை செய்யக்கூடிய விவசாயிகள் பயிரிடுகிற விஸ்தீரணத்தைக் குறைக்க வேண்டும் என்று விவசாய இலாகா டைரக்டர் உத்தரவிட்டுள்ளார். அதன் காரணமாக அந்தக் கம்பெனிகளும் விஸ்தீரணத்தைக் குறைத்துவிட்டன. சென்ற ஆண்டு நாங்கள் பயிரிட்ட அளவுக்கு இந்த ஆண்டிலும் பயிரிடுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கரும்பு உற்பத்தியை சர்க்கார் தடை செய்யவில்லையென்பதை நான் மீண்டும் சொல்லுகிறேன். கம்பெனிக்காரர்கள் குறைத்து வாங்குகிறார்கள் என்று சொன்னால் சர்க்கார் அதில் தலையிடுவது கஷ்டமாக இருக்கும்.

அரிசன ஆஸ்டல்கள்.

* **260-அ கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்கம் நடத்திவரும் அரிசன ஹாஸ்டல்களைச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றும் உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. ம. கமலநாதன் : மாவட்ட வெல்பேர் ஆபீஸர் இந்த ஹரிஜன ஹாஸ்டல்களை நேரடியாகக் கண்காணிக்க முடியவில்லை. அதனால் பலவிதமான ஊழல்கள் நடைபெறுகின்றன. முதலிலே